# உலகத் தமிழர் பேரமைப்பு
## முதலாண்டு நிறைவு மாநாடு மற்றும்
## உலகத் தமிழர் நாள்

புதுச்சேரி கம்பன் கலையரங்கில் 27.07.2003- இல் நடைபெற்ற “உலகத் தமிழர் நாள்” மற்றும் உலகத் தமிழர் பேரமைப்பு முதலாவது ஆண்டு நிறைவு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானம்:

1. உலகின் வேறு எந்த மொழியும் தமிழ் மொழி போன்று 4000 ஆண்டுகளுக்கு

மேலாக, பொருள் சிதைவு,மாற்றங்கள் ஏற்படாமல் செம்மொழியாக சீரிய

இளமைத் திறம் கொண்டது இல்லை என்பது நமது பெருமைகளில் ஒன்று.

இந்திய நடுவணர உடனடியாக தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும்

என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

<u>Translation</u>

No other language of the World has flourished for more then four Thousand years without mulilation and alerations and has progressed as an never young classical language like Tamil. This is one of the greatnesses of our Tamils. The Government of India should take steps to declare Tamil as a world classical language immediately.

2. வரும் 2004- ஆம் ஆண்டை உலகத் “ தமிழாண்டாக” நடுவண் அரசும், மாநில

அரசுகளும் அறிவிக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

<u>Translation</u>

The Government of Tamilnadu and the Government of India should declare the year 2004 as the “ year of Tamil”

3. புதுவை மற்றும் தமிழ் நாட்டு எல்லைக்குள் ஆட்சி மொழி, தொடர்பு மொழி, அற

மன்ற மொழி, கல்வி பயிற்று மொழி மற்றும் வழிபாட்டு மொழியாக எல்லா வகைகளிலும் தமிழ் மொழியை பயன்படுத்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4.தமிழ் மக்கள் பெரு எண்ணிக்கையிலுள்ள எல்லா நாடுகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்கிடல் வேண்டும், ஈழ, மலேசியா, மியன்மார், தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு போன்ற நாடுகளில் தமிழ் மொழிக்கல்வி மேம்பட அந்த அந்த நாடுகளுக்கு உலகத் தமிழ் மக்கள் உதவிட வேண்டும். தமிழக அரசும், தமிழ்ப் பல்கலைக்கழகங்களும் தமிழ் இணையப் பல்கலைக்கழகமும் இப்பணியில் முன்னின்று சிறக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

5. தமிழகத்தில் ஆங்கிலப் பாடம் முதல்வகுப்பு முதல் சேர்க்கப்பட்டதே மிகவும் தீங்கானது. பண்பாட்டுச் சீரழிவும் மொழிமயக்கமும் விளையும். இதை உடனடியாகத் திரும்பப் பெறல் வேண்டும் என தமிழக அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

6. தமிழ் வழிக் கல்விக்காக தமிழக அரசு முனைப்பாக செயல்பட்டு, தேவைப்பட்டால்

ஒரு அவசர சட்டமியற்றி உச்ச அற மன்றத்தில் நமக்கு சாதகமான தீர்ப்பை பெற்றிடல்

வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

7. புதுவை அரசு 8- ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாய மொழிப்பாடமாக அறிவித்ததை

வரவேற்று, இதை சரியான முறையில் உடனே நடைமுறைப்படுத்த வேண்டும் என

இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

8. அயல் மாநிலங்கள் போன்றே தமிழகப் பள்ளிகள் அனைத்திலும் 5 ஆம் வகுப்பு

வரை தமிழை ஒரு பாடமொழியாகக் கற்கவேண்டும். இது அனைத்து கல்விக்

கூடங்களுக்கும் பொருந்தும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

9. இந்தியாவில் பொடா மனித உரிமையை மறுக்கும் கொடுஞ்சட்டமாக உள்ளது.

சில மாநிலங்களில் அது அமைதி நாடுவோரை சிறைப்படுத்தியுள்ளது.

நடுவணரசுஉடனடியாக பொடா சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என இம்மாநாடு

வலியுறுத்துகிறது.

Translation
---------------

The POTA  of India is a black Act denying the basic Human Rights of

The Indian people.  In certain states of India, it has been misused to in

carcerate peace seeking people.  The Government of India shoould

immediately remove POTA from the statutes book.

10. உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் அய்யா நெடுமாறனையும் ஏனைய அமைதி

விரும்பும் தமிழர்களையும் தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என

இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

11. எமது பேரமைப்பு தொடக்க விழா நிகழ்ச்சி நிரல் குழுவின் தலைவர் போராசிரியர்

நெடுஞ்செழியனை கர்னாடக அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என

இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

Translation
---------------

The Government of Karnataka should immediately release Professor Nedunchezhian, who was the chairman of the programme committee of the Inaugural conference of the World Tamil Confederation held at Chennai on the 20th and 21st of July 2002.

12. சிங்கப்பூர்,மலேசியா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வேலைக்காகவோ,

வணிகத்திற்காகவோ, செல்லும் நம் தமிழர்கள் பெரும் இன்னல்களுக்கு

ஆளாகின்றனர். தமிழ் மக்கள் இன்னல் நீக்கிட தமிழக, புதுவை அரசுகள் விழிப்பாக

இருந்து , இந்திய தூதரக உதவி இவர்களுக்கு உடனடியாக கிடைத்திட

நடுவணரசிடம் தொடர்ந்து வற்புறுத்தவேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

Translation

Many Tamils who travel to Countries like Singapore, Malaysia, or United kingdom are subjected to many great hardships. The Government Of Tamilnadu, and Pondicherry should remain vigilant and demend that the Government of India should to provide all necessary consular help and sustenance to these victims.

13, பூர்வீக இனக்குடிகளாகிய ஈழத் தமிழர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கிட தற்போதைய போரில்லா சூழ்நிலை பெரிதும் உதவும் இந்நிலையில் நடுவணரசு அத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக தூதரக மற்றும் பொருள் வள நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

Translation

The ancient ethnic Ealam tamils have an opportunity to recover their lawful right with the continuing cease-fire situation in the Island. At this juncture, the Government of India should provide consular and materiall (Economic) help immediately as a humanitarian gesture.

14. தமிழர்கள் கூடுதலாக உள்ள நாடுகளில் தமிழர்களே இந்தியாவின் தூதர்களாக

நியமிக்கப்பட வேண்டும் என இம்மாநாடு அரசை கேட்டுக்கொள்கிறது.

Translation

The Government of India should appoint as Ambassador. or as High Commissioner, Tamil speaking officers, to those countries with Considerable / substantial Tamil Population like Srilanka, South Africa and Singapore.

15. தமிழக மக்களின் அடிப்படை நீர் ஆதாரமாகிய ஆறுகளின் பயன்பாட்டில் எவ்விதத்திலும் உரிமையிழக்காமல் பாதுகாக்க வேண்டியது தமிழக, புதுவை அரசுகளின் தலையாயக் கடமை. இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தெளிவாகவும், சுணக்கமின்றியும் நடைபெற இரு அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

16. நமக்கு உரிய காவிரி நீர் பெற உச்ச நீதி மன்றத்ததில் முழு மூச்சோடு தமிழக, புதுவை அரசுகள் போராடவேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

17. உலக மயமாக்கல் தமிழ் நாட்டிற்குக்கேடாக மாறுதல் கண்கூடு . நமது நலத்தை,

நிலத்தடி நீரை, கனிம, காட்டு, நீர் வளங்களை எந்த அயலாரும் ஆளவோ வாங்கவோ

கூடாது என சட்டத்தின் மூலம் தடை செய்ய வேண்டும் என தமிழக, புதுவை அரசுகளை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

18. மலேசியாவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் தமிழ் வழிக் கல்விக்கு இன்னல்களும்

முட்டுக் கட்டைகளும் இடப்படுவதாக தெரிய வந்துள்ளது. நடுவணரசு தொடர்பு

கொண்டு தொடர்ந்து தமிழ் வழிக் கல்வியை பாதுகாக்க வேண்டும் என இம்மாநாடு

கேட்டுக்கொள்கிறது.

<u>Translation</u>

It is learnt that in Malaysia and South Africa , some impediments are experienced in the matter of Tamil based instruction in schools. The Government of India should get in touch with these Governments and protect the interests of Tamil language and medium.

of instruction in these countries.

19. தமிழிசையையும் தமிழ்நாடகத்தையும் மீண்டும் வளப்படுத்தி உலகெங்கும்

பரப்புதல் வேண்டும். இம்முயற்சிகளில் அரசும் அனைத்து மக்களும் ஊக்கமோடு

செயல்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

20. தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தை மேம்படுத்தி, வளப்படுத்தி, கூடுதல்

மூலிகை வளம் பாதுகாத்து ஆய்வுகள் செய்து, தொல் சிறப்பை உலகறியச்

செய்யவேண்டும் என தமிழக, புதுவை, நடுவண் அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

<u>Translation</u>

In Government of India should do more to develop Siddhs systems of Medicare. It should strengthen and protect its herbal heritage., undertake needed research and propogate its ancient glory to the world.

21. பண்புக் கேடு விளைவிக்கும் வடத் தொலைக்காட்சி வகைகள் வீடுகளில் அனுமதிக்க வேண்டாம் என தமிழ் மக்களை எச்சரிக்கிறோம். தரமான, செய்திகள், அறிவியல், தமிழிசை, தமிழ் நாடகம் போன்றவைகள் தரக்கூடிய தனியார் மற்றும் அரசு ஒளிபரப்புகளை ஊக்குவிக்கலாம் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

22. ஆத்திச் சூடி, கொன்றைவேந்தன், நாலடியார், திருக்குறள் போன்ற சிறந்த தமிழ்க் கருவூலங்கள் அனைத்து பள்ளிகளிலும், அனைத்து வீடுகளிலும் பயன்படவேண்டும். உலகத் தமிழ் மாணவர்கள் அதை இன்னிசையோடு பாடிப் பழக வேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

23. புதுவை அரசு தொடங்க உள்ள மழலையர் வகுப்புகள் முழுமையாக தமிழ்வழி வகுப்புகளாக அமைக்கப்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

24. புதுவை அரசு உடனடியாக தமிழ் வளர்ச்சி சிறகத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தமிழ் வளர்ச்சித்துறை தொடங்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

25. நடுவண் மற்றும் மாநில அரசுத் துறைகளில் உள்ளது போன்றே தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீடு தரப்படவேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

www.tamilinfoservice.com